University of Jaffna Sri Lanka
Library

# தந்தி

இல: 1116 | 1970 ஆகஸ்ட் 24 திங்கட்கிழமை | விலை சதம் 5

மீனாட்சி



என்னுங்க, மட்டக்குழி பஸ் டிப்போவில் "கன்டீன்" தகராறினால் அப்பகுதி பஸ் ஓடவில்லையென்று பெரும் புகாராயிருக்குதே!

அப்படியென்றால் நெற்பயிரை மான் மேய்வது கண்ட விவசாயி வீடு திரும்பியதும், தான் இருக்கிற மான் தோலுக்குப் போட்டு அடித்தது மாதிரியோ?

## கொலை

மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான எல். சிறிபால என்பவர் நடுநிசியில் இனம் தெரியாதவரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

படியத்தலாவையை அடுத்த தெஹிகொல என்னும் இடத்திலேயே இக் கொலை நடந்துள்ளது.

இப் பயங்கர கொலையின் காரணமாகப் பின்தங்கிய நிலையில் உள்ள இக் கிராம மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. பொலீஸார் புலன் விசாரணை செய்கின்றனர். (15)

## வேலை நிறுத்தம்

இலங்கைத் தோட்ட உத்தியோகஸ்தர் சங்கம் செப்டெம்பர் முதலாம் திகதி வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளது. (5)

## புறக்கோட்டையில் தினமும் கைவரிசை

# முடிச்சுமாறிகளின் தொல்லை அதிகரிப்பு

### இரவு பஸ் பிரயாணிகள் பெரும் திண்டாட்டம்

**புறக்கோட்டை பஸ் நிலையத்தில் இரவு 9-00 மணிக்குப் பின்னர் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும் பஸ் பிரயாணிகள் பலர் முடிச்சுமாறிகளினால் பெரும் தொல்லைக்குள்ளாகி வருகிறார்கள்.**

பெரும்பாலும் ஹோமகம, பாணந்துறை பஸ் தரிப்பு நிலையங்களிலேயே முடிச்சுமாறிகள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

நள்ளிரவுவரை இந்தப் பஸ் தரிப்பு நிலையங்களில் பஸ் பிரயாணிகள் பஸ்ஸுக்காக முண்டியடித்துக் கொண்டிருப்பதை இந்த முடிச்சு மாறிகள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பெரும்பாலும் வெளியூர்களில் இருந்து ரயில்களிலும் பஸ்களிலும் கொழும்புக்கு வரும் பிரயாணிகள் புறக்கோட்டை பஸ் நிலையத்திலேயே தங்கியிருப்பது வழக்கம்.

புறக்கோட்டை பஸ் நிலையத்தில் முடிச்சு மாறிகள் கோஷ்டி, கோஷ்டியாக இயங்கி வருவதாக கூறப்படுகிறது.

முடிச்சுமாறிகள் தமது கைவரிசையைப் பஸ் பிரயாணிகளிடத்தில் காட்டும்போது, சக பஸ் பிரயாணிகள் அதைக் கண்டாலும் காணாதவர்களைப்போல இருந்து விடுகின்றனராம்.

முடிச்சுமாறிகளிடம் வீணை வம்புக்குப் போவதற்கு இவர்கள் விரும்பாததே இதற்குக் காரணமாகும்.

கடந்த சனிக்கிழமை இரவு 10 மணிக்குப் புறக்கோட்டை பஸ் நிலையத்தில் இதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றது.

தூங்கிக் கொண்டிருந்த பஸ் பிரயாணி ஒருவரிடம் முடிச்சுமாறி ஒருவர் தனது கைவரிசையைக் காட்டியபோது அருகில் நின்ற மற்றொரு பஸ் பிரயாணி அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டார்.

விட்டானா அவன் ஏனைய முடிச்சுமாறிகளை உதவிக்கு அழைத்தான். முடிச்சுமாறிகள் கோஷ்டி காட்டிக் கொடுத்த பிரயாணிக்கு குபீர், குபீர் என்று விட்டது குத்து.

தலைதப்பினால் போதும் என்று குத்து வாங்கியவர் டாக்சி ஒன்றைப் பிடித்து எடுத்தார் ஓட்டம்.

இதற்கு முன்னர் நடந்த மற்றொரு சம்பவத்தின் போது ஒரு பெண்ணும் இரு ஆண்களும் கத்தியால் குத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து பொலீஸ் பாதுகாப்பு இப் பகுதியில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (5)

## இந்திராவுடைய நிலத்தை பறிக்கும் முயற்சி தோல்வி

புதுடில்லி, ஆக. 23

இடதுசாரி நிலப்பறி ஆர்ப்பாட்டக்காரர்கள் புதுடில்லிக்கு அருகில் உள்ள பிரதமர் இந்திரா காந்தியின் பண்ணையை ஆக்கிரமிக்க மேற்கொண்ட முயற்சியை பொலீசார் முறியடித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இரு எம்.பி.க்கள் உட்பட 40 சம்யுக்த சோஷலிஸ்ட் அங்கத்தினர்கள் கைது செய்யப்பட்டனர்.

டில்லியிலிருந்து 18 மைல் தூரத்தில் பிரதமருக்குச் சொந்தமான இந்த 14 ஏக்கர் பண்ணை இருக்கிறது. (ய)


## கொள்ளை லாபத்துக்கு சிறை சென்றவரை நாடு கடத்தல்

மாட்டிறைச்சியில் கொள்ளை லாபம் அடித்ததற்காக 5000 ரூபா அபராதமும், ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்ட கசாப்புக்கடைக்காரர் ஒருவரின் உதவியாளர் இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டுள்ளார்.

கொழும்பு முனிசிப்பல் கோர்ட்டின் தீர்ப்பின் பின்னர் அவர் வெலிக்கடை சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த சமயம் தீர்ப்புக்கு எதிராக அப்பீல் செய்திருந்தார். அவருடைய அப்பீல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட முன்னர் தண்டனைகாலமும் முடிவடைந்தது.

அவர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்று கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டு உள்ளார்.

முகம்மது மொஹிதீன் ஜமால்தீன் (39) என்பது அந்த நபரின் பெயர்.



உடை அலங்காரம் விட்டு, உடல் அலங்காரத்தில் தம் நேரத்தைச் செலவிடும் இரு வாலைக் குமரிகளைக் காணுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழை மக்கள் பணம் சேர்த்து கல்லறை எழுப்பினர்

# கொலையாளி டாக்டர் பெரும் புகழ் பெற்றார்

**கொலைக் குற்றத்துக்காக தீவொன்றில் சிறை வைக்கப்பட்ட டாக்டர் ஒருவர் இறந்தார். ஆனால், ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் தாங்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தைச் சேமித்து அவருக்காக மாபெரும் கல்லறை ஒன்றைக் கட்டிக் கௌரவித்தனர்.**

பிரான்ஸ் நாட்டு டாக்டரான பியரி போரத்ராட் என்பவருக்கு மாகரிட்டா தீவு வாசிகள் இவ்வாறு கௌரவமளித்தனர்.

"ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றிய எங்கள் அன்பான டாக்டருக்கு!" என்று அந்தக் கல்லறையில் எழுதப்பட்டிருந்தது.

இதைப்பற்றிக் கூறப்படுவதாவது:

மார்செல்லெஸ் நகரத்தில் டாக்டர் போர்கராட் சிறந்த முறையில் வைத்தியம் செய்து பெரும் பணம் சம்பாதித்து வந்தார். இவருடைய மனைவி ஓர் அழகு ராணி இவ்வாறு இவர்கள் உல்லாச வாழ்க்கை நடத்திவரும் நாட்களில் இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்றது. டாக்டர் யுத்த சேவைக்காகச் சென்றார்.

யுத்தத்தின் முன் ஊர்திரும்பிய டாக்டர் புதிய மனிதனாகக் காணப்பட்டார். யுத்தத்தின் சமயம் அவர் கூடாதவர்களுடன் பழகியதாலோ என்னவோ, போதைப் பொருள்களிலும் விலை மாதர்களிலும் தன் காலத்தைக் கழித்தார். யுத்தத்தின் சமயம் வீசப்பட்ட குண்டுகள் இவருடைய மூளையைக் குழப்பிவிட்டதாக ஊர்மக்கள் பேசினர். டாக்டரின் வியாபாரமும் படிப்படியாகக் படுத்து விட்டது.

இவ்வாறு இருக்கும் சமயம் வங்கியொன்றில் 5,000 பவுண் திருடிய ஒருவன் டாக்டருடைய வீட்டு அலுமாரியொன்றில் பிணமாகக் கிடப்பதைப் பொலீஸார் கண்டுபிடித்தனர். அத்தோடு இவன் பணத்தைக் கொண்டு சென்றதாகக் கூறப்பட்ட பை வெற்றுப் பையாக அந்த அலுமாரியில் கிடந்தது.

டாக்டர் விசாரணை செய்யப்பட்டார். ரூமிடோ என்ற குறிப்பிட்ட திருடன், வெற்றுப் பையுடனேயே தன் வீட்டுக்கு வந்ததாகவும் தனது இருதய நோய்க்கு இன்ஜெக்ஷன் போடும்படி அவன் தன்னிடம் கேட்டதாகவும் அதன்பின் பணமும் கூடக் கேட்டதாகவும் டாக்டர் பொலீஸாரிடம் கூறினார்.

தான் அவனுடைய இருதய வலிக்கு இன்ஜெக்ஷன் போட்டு விட்டு அவன் கூறுகைக் கேட்ட பணத்தைப் பெற்றுவர வெளியே சென்று திரும்பிய போது அவன் இறந்திருந்ததாகவும் அவர் சொன்னார். தன் மீது கொலைக் குற்றம் சுமத்தப்படுமே என்ற பயத்தினால் அவனுடைய சடலத்தை தான் அலுமாரியில் மறைத்து வைத்ததாகவும் டாக்டர் மேலும் கூறினார்.

ஆனால் டாக்டரின் கதையை நீதிமன்றம் ஏற்கவில்லை. அவருக்கு முதலில் மரணதண்டனை விதிக்கப்பட்டு பின் அதைக் குறைத்து சிறைத்தண்டனையாக்கி "டெவல்ஸ்" தீவுக்கு அனுப்பப்பட்டார்.

அத்தீவில் இருந்து தப்பிய டாக்டர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட ஏழைகள் வாழும் மாகரிட்டா தீவில் சென்று வாழ்ந்தார்.

அங்கு ஏழைகளின் மலேரியா நோயை சுகமாக்கி அவர்களிடையே பெரும் பிரசித்தி பெற்றார். இதனால் மாகரிட்டா தீவு ஏழை மக்கள் அவரைத் தெய்வம் போல் கௌரவித்து 1962-ம் ஆண்டு இறந்த அவருக்காக இதுகால வரையும் பணம் சேர்த்து அண்மையில் பெரிய கல்லறை ஒன்று கட்டி கௌரவித்துள்ளனர். (ல)

## நகைத் திருட்டு வழக்கில் சிசுவுடன் தம்பதிகள் ஆஜர்

திருகோணமலை, ஆக. 23

**நண்பர்கள் போல் நடித்து ஒரு வீட்டில் 2,500 ரூபா பெறுமதியான நகைகளைக் களவாடியது என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டு இருந்த தம்பதிகள் நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டனர்.**

வரதராஜசிங்கம் - நாகபூஷணி என்ற தம்பதிகளே மீண்டும் திருமலை நீதவான் திரு. டி. சி. டபிள்யூ. விக்ரமசேகரா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படும் பொழுது கர்ப்பிணியாக இருந்த நாகபூஷணி சென்ற தவணை திருமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதற்காக திருமலை விளக்கமறியற் சாலையில் தங்கி இருந்த பொழுது ஒரு குழந்தையை பெற்று எடுத்தாள்.

இன்று கைக்குழந்தையுடன் தான் இத் தம்பதிகள் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர்.

2,500 ரூபா பெறுமதியான நகைகளைக் களவெடுத்ததாகவும் களவெடுத்த நகைகளை வைத்து இருந்ததகாகவும் சந்தேக நபர்கள் மீது திருத்தப்பட்ட குற்றப் பத்திரிகைகளை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்ட நீதவான், மேல் விசாரணையை செப்டம்பர் முதலாம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ல-287)

## ஹிப்பிகளை, மயிரை வெட்டி விரட்ட நடவடிக்கை

மெக்ஸிகோ, ஆக. 23

நீண்ட தலைமயிரை உடைய ஹிப்பிகளை, சவரம் செய்து விட்டு நகருக்கு வெளியே ஓடும்படி மெக்ஸிகோ ஜனாதிபதி குஸ்டாவோ டயர் ஓடாஸ் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் விஜயத்தை முன்னிட்டே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"நீண்ட தலைமயிரையுடைய எவரும் நகருக்குள் காணப்படுவதை அனுமதிக்க முடியாது. நாங்களே அவர்களுக்குச் சவரம் செய்வித்து விரட்டி விடுவோம்" என்று மெக்ஸிகோ ஜனாதிபதி கூறினார்.

மெக்ஸிகோ துறைமுகம் உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக இருக்கிறது. முன்பு உலகப் புகழ்பெற்றுள்ள இந்த இடத்தில், புகழ்பெற்ற நடிகர்களான ரிச்சார்ட் பேர்ட்டன், எலிஸபெத் டெய்லர் ஆகியோர் அடிக்கடி வந்து தங்குவதுண்டு.

"ஹிப்பிகளால் இந்த நகருக்கு அவமானம் ஏற்படுகிறது. அதனால் எந்த ஹிப்பியையும் இங்கு அனுமதிக்க மாட்டோம்" என்று மெக்ஸிகோ கவர்னர் கூறினார். (ல-15)

## தண்டனை ஒத்திவைப்பு

திருகோணமலை, ஆக. 23

டைனமட் வெடி ஒன்றை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயினுதீன் என்ற நபரை, விசாரணையின் பின்னர் குற்றவாளியாகக் கண்டார் நீதவான்.

திருமலை நீதிபதி திரு. விக்ரமசேகரா எதிரிக்குத் தண்டனை விதிப்பதை செப்டெம்பர் 9க்கு ஒத்தி வைத்தார். (ல- 287)

## கணவன் கட்டைக் களிசான் அணிவதை, மனைவி விரும்பவில்லை

"கணவன் கட்டைக் காற்சட்டை அணிவதை மனைவி விரும்பவில்லை. கணவன் "லோங்ஸ்" போட வேண்டுமென்ற மனைவியின் ஆசையை அவர் பூர்த்தி செய்யவில்லை. இதனால்தான் இருவரும் பிரிந்து வாழ நேரிட்டது."

எதிர் மனுதாரருக்காக ஆஜரான வழக்கறிஞர் இப்படிக் கூறினார்.

கொழும்பு தற்காலிக மேலதிக நீதவான் திரு. எச். ஈ. விஜயதுங்க முன்னிலையில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது.

மருதானை, கம்பெல் பிளேஸில் வசிக்கும் ஆர். விஜயலட்சுமி என்பவர், தனது கணவன் எம். முத்துலிங்கம் என்பவரிடமிருந்து ஜீவனாம்சம் கோரி இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். முத்துலிங்கம் திருகோணமலை நகரசபையில் மின்சாரப் பகுதி ஊழியராகக் கடமையாற்றுகிறார்.

"விஜயலட்சுமி எதிர் மனுதாரரின் சட்டபூர்வமான மனைவி. கடந்த மார்ச் 17ந் திகதியிலிருந்து எதிர் மனுதாரர் பிரிந்து வாழ்கிறார். மனுதாரர் இப்பொழுது நிறைமாதக் கர்ப்பிணி. அவருக்கு உதவுவார் இல்லை" என்று மனுதாரரின் வழக்கறிஞர் கூறினார்.

மேல் விசாரணை அக்டோபர் மாதம் 10-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ல-15)

## மலிவு விற்பனை

இலங்கை புற்று நோய்ச் சங்கத்தின் மலிவு விற்பனையொன்று புரட்டாசி மாதம் 7-ம் திகதி கொழும்பு செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

ஆவணி 30-ம் திகதிக்கு முன்பாக பாவனைக்குரிய பழைய அல்லது புதிய பொருட்களை இலங்கை புற்று நோய்ச் சங்கத்துக்கு அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது. (ல)


## தந்தி சிறு விளம்பரங்கள்

### வசியம்

காதலில் வெற்றியை எதிர் பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய ஊறுப்பொலை.

### மருந்து

மதன சஞ்சீவி லேகியம் (ஆண்களுக்கு மட்டும்). பாலிய சேஷ்டையினாலோ அல்லது அதிக சம்போகத்தினாலோ வீரியம், ஆண்மை குறைந்தவர்களுக்கும் (SEXUAL DEBILITY) சக்தியை இழந்தவர்களுக்கும் இழந்துபோன சக்தியை மீட்டு, புதிய சக்திக்கும், திரேக வளர்ச்சிக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம். ஒரே புட்டியில் குணம் காணலாம். மதன சஞ்சீவி, ஒரு ரூத்தல் ரூ. 23/- ½ ரூத்தல் ரூ. 12/ வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும். முருகானந்தா வைத்தியசாலை, 104, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

### வைத்தியம்

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி, பிற வைத்தியங்கள் செய்து குணப்படாமல் கைவிடப்பட்டதானாலும் சரி, ஊசி ஏற்றி குணப்படாமலிருந்தாலும் சரி, (ஆண் - பெண் இரகசிய நோய்கள்) இனி காலதாமதம் செய்யாமல் நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாதுபோனால் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். ஆலோசனை இலவசம். முருகானந்தா வைத்தியசாலை, 104, செட்டியார் தெரு, கொழும்பு 11.

### அதிர்ஷ்ட நியூமராலஜி

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அதிர்ஷ்டமுடன் வாழ உங்களின் அதிர்ஷ்ட கால விபரங்களைத் தெரிந்துக் கொள்ளுங்கள். உங்களின் பெயர், கையெழுத்து, பிறந்த திகதி, மாதம், வருஷம், இந்த மூன்றையும் எழுதி அனுப்பி வைக்கவும். உங்களின் அதிர்ஷ்ட வாழ்க்கைக்கு தேவையான விபரங்களை ஆறு ரூபாய்க்கு வி-பி-பி- மூலம் அனுப்பி வைக்கிறோம். (உங்களிடத்திற்கு தபால்காரர் கொண்டு வருவார் அவரிடம் பணம் கொடுத்து பெற்றுக் கொள்ள முடியும்).

அவர் இண்டிபெண்டன் லக்கி சென்டர். 60½, ரக்லமேசன் ரோடு, கொழும்பு-11.


### டின்னில் அடைத்து விடுக!

பேசாலை மீன்கள், டின்னுக்குள் புகுவதற்கு மறுத்து விட்டன. இல்லையேல் பேசாலையிலேயே மீன் ஏராளமாகக் கிடைக்கும்போது தேவேந்திரமுனையிலிருந்தும் கிழக்குப் பகுதிக் கரையோரங்களிலிருந்தும் மீனைப் பேசாலைத் தொழிற்சாலைக்குக் கொண்டு வருவதற்கு ஏதாவது நியாயம் உண்டா? இதன் காரணமாக எட்டு ரூபாச் செலவில் அடைத்த மீனைத் தொண்ணூறு சதத்திற்கு விற்றார்களாம்! அப்பாடா, அந்த அளவில் தொண்ணூறு சதமாவது தேறியது என்றால், அதுவும் அந்த மீன் உருசி இல்லையாம். விற்பனவு கம்மியாம். செட்டியார் நஷ்டம் ஊர் மேலே. காரியமில்லைக் கணக்கை வைத்துக் கொள் என்று ஒரு பழமொழி உண்டு. அது போல மக்கள் இருக்கவே இருக்கிறார்கள். தண்டனையை அனுபவிப்பார்கள். ஏனையா, மக்கள் மீது இப்படிச் சுமத்துவான்? கால தாமதம் செய்யாது பேசாலை டின்மீன் தொழிற்சாலையையே டின்னுக்குள் அடைத்து விட்டால் சனி தொலைந்து விடும், சங்கடம் தீர்ந்து விடும்.

தந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து விட்டதாக டாக்டர்கள் கூறினர்

# தனது மரணச் சடங்கை கண்டார் நோயாளி!

## உயிருடன் இருந்தவருக்கு நேர்ந்த விபரீதம்

ஆஸ்ட்ரியா, ஆக. 23

மூன்று நாள் சவப் பெட்டியொன்றில் கிடந்தவர் ஒருவர் தனது இறுதிச் சடங்குக்கு செய்யப்படும் ஏற்பாடுகளை கண்டார்!

ஜோசப் ராமொஸ்ச் என்பவர் பாரிசவாதம் கண்டிருந்தார். அவரால் தன் உடம்பில் உள்ள ஒரு சதையைக் கூட அசைக்க முடியாதிருந்தது. அவர் இறந்து விட்டார் என டாக்டர்கள் முடிவு செய்தனர்.

இதைப்பற்றிக் கூறப்படுவதாவது:

பாரிசவாதம் கண்டதால் 53 வயதான ஜோசப் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

"ஜோசப்பால் பிழைக்க முடியாது. அவர் மரணத்தை அணைத்துக்குக் கொண்டிருக்கிறார்" என டாக்டர்கள் கூறினர்.

உடனே மதகுருமார் அழைக்கப்பட்டு மதச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. சிறிது நேரத்தில் அங்குவந்த டாக்டர் ஒருவர் ஜோசப்பை பரிசோதித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக அறிவித்தார்.

டாக்டர் மரணச் சாட்சிப் பத்திரத்தை கையொப்பமிட்டு பிரேதத்தின் முழங்கால்களுக்கிடையில் செருகிவிட்டுச் சென்றார். ஆனால் ஜோசப்பின் தசைகள் அசையவில்லையே ஒழிய அவர் உயிருடனேயே இருந்தார். அதே சமயம் நல்ல அறிவுடனும் மற்றவர்கள் செய்வதை அவதானிக்கக் கூடியவராகவும் இருந்தார்.

அதன்பின் நடந்தவற்றை, ஜோசப் பின்வருமாறு விளக்குகிறார்.

"என்னைச் சவப்பெட்டியொன்றில் போட்டு தேவாலயத்துக்கு கொண்டு சென்றனர். இரண்டு மெழுகுவர்த்திகள் கொளுத்தப்பட்டன.

"மூன்று நாட்கள் நான் அங்கு வைக்கப்பட்டபின் இறுதிச் சடங்கை பொறுப்பேற்ற சொந்தக்காரர்கள் என்னை சவக் காட்டுக்குக் கொண்டு சென்றனர். இக்கட்டத்தில் எனது கைகட்டை விரலை மாத்திரம் என்னால் சிறிது உயர்த்த முடிந்தது. அருகாமையில் இருந்த ஒருவர் இதை அவதானித்து உடனே டாக்டர்களை வரவழைத்தார்"

12 மணி நேரம் டாக்டர்கள் பாடுபட்டபின் ஜோசப் உடம்பின் மற்றைய பாகங்களையும் அசைத்தார். இப்போது இரண்டு தடிகளின் உதவியுடன் ஜோசப் நடந்து திரிகிறார். (ல)

## வாழைப்பழம்திருடியவரை நீதிபதி எச்சரித்து விடுதலை

30 சதம் பெறுமதியான மூன்று வாழைப்பழங்களைத் திருடியதாகக் கூறப்படும் எல், எம். பிரேமரத்ன என்பவர் நீதிபதியால் எச்சரிக்கை செய்யப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் எதிரியான எல். எம். பிரேமரத்ன கொட்டாஞ்சேனையைச் சேர்ந்தவர்.

பெருமாள் என்ற ரிக்ஷோக்காரரிடம் இருந்து மூன்று வாழைப்பழங்களைத் திருடியதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கொழும்பு மேலதிக நீதிபதி திரு. நந்தா விஜேசேகரா முன்னிலையில் அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டுக்காரரான பெருமாள் வாழைப்பழக் குலைகளை ரிக்ஷோவில் வைத்துத் தள்ளிக் கொண்டு போனதாகவும், அப்பொழுது சந்தேக நபர் பின்னால் வந்து மூன்று வாழைப்பழங்களைப் பிடுங்கியதாகவும், வாழைப்பழம் பிடுங்கப்பட்ட சமயம் பின்னால் ரோந்து சுற்றி வந்த பொலீஸார் சந்தேக நபரைக் கையும் களவுமாகப் பிடித்ததாகவும் விசாரணையின் போது தெரிய வந்தது.

சந்தேக நபருக்கு எதிராக எட்டு வழக்குகள் விசாரணைக்கு வர இருப்பதாகவும், சந்தேக நபரின் நடத்தையைத் தெளிவுபடுத்துவதற்காகவே இந்த வழக்கைத் தொடர்ந்ததாகவும் பொலீஸ் தரப்பில் கூறப்பட்டது. (5)

## தந்தை மரணத்தை அடுத்து நான்கு பிள்ளைகள் ரிமாண்ட்

புங்குடுதீவு, ஆக. 23

சரவணையைச் சேர்ந்த சின்னத்தம்பி நகுலேசபிள்ளை என்ற 67 வயது நபர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது மரணம் சம்பந்தமாக இவரது நான்கு பிள்ளைகள் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்ற 17.8.70ல் சின்ன \ நம்பி நகுலேசபிள்ளை வீட்டுப் படியில் விழுந்ததால் மரணம் ஏற்பட்டதாகக் குறிப்பிட்ட நான்கு பிள்ளைகளான துஷ்சந்தன், உமாபதிசிவம், ஸ்ரீதேவி, நற்தமிழ்மாது என்போர் ஊர்காவற்றுறைப் பொலீஸுக்குத் தகவல் கொடுத்திருந்தனராம்.

திடீர் மரண விசாரணை அதிகாரியும், பதில் நீதிபதியுமான திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினர்.

அவர் தமது, விசாரணையில் பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார்.

பிரேத பரிசோதனை செய்த டாக்டர், இறந்தவரின் உடலில் பலத்த காயங்கள் காணப்பட்டதாகவும், ஏழு விலா எலும்புகள் நொறுங்கிக் காணப்பட்டதாயும் தெரிவித்தார்.

இதனையடுத்து மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் குறிப்பிட்ட நான்கு பிள்ளைகளையும் ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ல- 240)

## இளம் பெண் திடீரென சாரத்தை அவிழ்த்தாளாம்

திருகோணமலை, ஆக. 23

முறைப்பாட்டுக்கார இளம் பெண் சம்பவதினம் எதிரியின் சாரத்தை திடீரென்று அவிழ்த்து விட்டாள்!

இப்படித் திருமலை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த தாக்குதல் வழக்கு ஒன்றில் எதிரிதரப்பில் ஆஜரான வழக்கறிஞர் நீதவானிடம் சொன்னார்.

இவ்வழக்கில் நந்தாவதி என்ற இளம்பெண்ணின் கையில் காயம் ஏற்படுத்தியதாக ஹரமானிஸ் என்பவர் மேல் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆர். சம்பந்தர் நீதவானிடம் தெரிவிக்கையில், "ஐயா எதிரியும் முறைப்பாட்டுக்காரரும் நெருங்கிய உறவினர்கள். சம்பவதினம் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்பொழுது எதிரி சாரம் உடுத்திருந்தார். முறைப்பாட்டுக்கார இளம்பெண் திடீரென்று எதிரியின் சாரத்தை அவிழ்த்து எறிந்துவிட்டார். இதனால் எதிரி அவமானப்பட வேண்டியதாயிற்று" என்றார்.

குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரிக்கு, முறைப்பாட்டுக்காரப் பெண்ணுக்கு நஷ்ட ஈடாக 50 ரூபா வழங்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (ல- 287)

## விசேட கவுண்டர்

திருகோணமலை, ஆக. 23

சம்பள தினங்களில் திருமலை பிரதம தபாற் கந்தோரில் விசேட மணி ஆடர் கவுண்டர் ஒன்று திறந்து இருக்கும். (ல–287)

## தாயகம் திரும்பினர்

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் நிர்வாகக் காரியதரிசி திரு. எம். ஜெயராம் நேற்று இலங்கை திரும்பினர்.

சென்ற மாதம் 18–ம், 19–ம் திகதிகளில் பாரிசில் நடைபெற்ற இந்தோ சீனப் பிரச்சினை சம்பந்தமான அனைத்துலக தொழிலாளர் சம்மேளனத்தில் விசேட மகாநாட்டில் கலந்து கொண்ட அவர், உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் பார்வையாளராகக் கலந்து கொண்டார். (ல)

## கண்டக்டர் கொலை வழக்கில் மாணவி காதல்பற்றிகூறினார்

சாவகச்சேரி, ஆக. 23

"பள்ளி மாணவி கோகிலா தேவிக்கும், காலஞ்சென்ற கண்டக்டருக்குமிடையில் காதல் இருப்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் கோகிலாதேவிக்கு காலஞ்சென்ற கண்டக்டர் துரைராஜா கடிதம் கொடுப்பதாக, ஆசிரியர் தியாகராஜா என்னிடம் சொல்லியிருக்கிறார்"

முல்லைத்தீவு பஸ் கண்டக்டர் துரைராஜா கொலை வழக்கில் சாட்சியமளித்த இ. போ. ச. சாரதியான எஸ். யூ. முகமதலி முல்லைத்தீவு நீதவான் திரு. கே. ஜீ. திசநாயக்கா முன்னிலையில் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த வழக்கில் கடந்த ஜூன் மாதம் 8-ம் திகதி இரவு முல்லைத்தீவு இ. போ. ச. பஸ் கண்டக்டர் துரைராஜா என்பவரை குழுனமுனையில் வைத்துக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த மயில்வாகனம் தியாகராஜா, வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம், ஆகியோர்மீது முல்லைத்தீவுப் பொலீசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு நீதவான் திரு. திசாநாயக்கா முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

சாரதி முகமதலி தொடர்ந்து தனது சாட்சியத்தில் கூறியதாவது

"இக் கொலை நடைபெற்றதினம் குறிப்பிட்ட அந்த இ. போ. ச. பஸ்ஸில் நான்தான் சாரதியாகக் கடமையாற்றினேன். காலஞ்சென்ற துரைராஜாதான் கண்டக்டராகக் கடமையாற்றினர். சம்பவதினம் நாம் வழமையாக இரவில் தரித்து நிற்கும் இடமான சின்னப்பிள்ளை தேநீர் கடை முன் பஸ்ஸை நிறுத்தினேன்.

"அன்று நாம் வழமைபோன்று எமது பஸ்ஸில் ஏறிப் படுத்துறங்கினோம்.

"கமலநாதன் இரவு பன்னிரண்டரை மணிக்கு ஏதோசத்தம் கேட்பதாகக் கூறி லைட்டை அடிக்கும்படி சொன்னார். அவர் கூறியதும் நான் உடனே லைட்டை அடித்து காலஞ்சென்ற கண்டக்டரை எழுப்பிப் பார்த்தேன். அவர் எழும்பவில்லை. பின்னர் முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போவிற்குச் சென்று மனேஜரிடம் சம்பவத்தைக் கூறினேன். அவர் சொற்படி சடலத்தைப் பொலீஸில் ஒப்படைத்தேன்."

வழக்கு அடுத்த மாதம் 16-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ல–51)


## நினைப்பதெல்லாம் கைகூடுவதற்கு . . . .

உங்கள் பிரச்சினை எதுவானாலும் சரி. உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று, தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ, கடையிலோ

ஸ்ரீ ராம வாசனைப் புகையை

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3–25
மூன்று மாத பாவனைக்கு ரூ. 7–50

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாமே வெற்றியை தரவல்லது.

ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்

(விலை ரூ 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவறாத நிவர்த்தியைப் பெறுங்கள் வரியும் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும் காதலில் வெற்றி பெற்றோரின் விருப்பம். நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இவ்விலாச விபரங்கட்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற
மகா மாந்திரீகர்

நீலன் கந்தசாமி,

லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டன் பத்திரிகையின் திடுக்கிடும் தகவல்

# கேரள இளம் பெண்கள் ஐரோப்பாவுக்கு விற்பனை

லண்டன், ஆக. 23

ஐரோப்பாவிலுள்ள கன்னியர் மடங்களுக்கு கேரளாவிலிருந்து கிராமப்புற பெண்கள் விலைக்கு வாங்கப்படுவதாக லண்டன் "சன்டே டைம்ஸ்" பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

கேரளாவின் கத்தோலிக்க சபையிலிருந்து இவ்விளம் பெண்கள் ஐரோப்பிய கன்னியர் மடங்களுக்கு விற்கப்படுகின்றனராம்.

இதுவரை சுமார் 1,200 இளம் பெண்கள் இவ்வாறு வாங்கப்பட்டுள்ளதாக வத்திக்கான் அறிவித்துள்ளது. ஆனால் விசாரணைகளின் பின்பு இத்தொகை 2000க்கும் அதிகமாக இருக்க வேண்டுமென "சன்டே டைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது.

இவ்வாறு வாங்கப்பட்ட ஒவ்வொரு இளம்பெண்ணுக்கும் சில கன்னியர் மடங்கள் சுமார் 200 பவுனிலிருந்து 300 பவுன்வரை கொடுத்திருப்பதாகச் செய்தி மேலும் கூறுகிறது.

கத்தோலிக்கத் தேவாலயங்களுக்குச் சொந்தமான சுமார் மூன்று லட்சம் பவுன் இவ்வாறு இளம்பெண்களை வாங்கியதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மன் நாடுகளில் உள்ள பல கன்னியர் மடங்கள் இவ்வாறு கேரள நாட்டுப் பெண்களை விலை கொடுத்து வாங்கியிருப்பதாக பத்திரிகை கூறுகிறது.

ஸ்பெயினில் உள்ள சில கன்னியர் மடங்களில் இவ்வாறு கேரள நாட்டு இளம்பெண்கள் இருப்பதாகவும் அமெரிக்காவும் சில இப் பத்திரிகைச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ல)

## மூதூர்

மூதூர். தோப்பூர் பிரதேசங்களில் தினபதி, தந்தி, ராதா, சிந்தாமணி, தவச, சவச, ரிவிரெச, இரணம, ரசகதா, ஸ்ரீ, சன், ஸ்டார், வீக்கென்ட் இதர சுயாதீன பத்திரிகா சமாஜத்தாரால் வெளியிடப்படும் சகல பிரசுரங்களையும் விற்பனை செய்ய நாணயமும், நம்பிக்கையும் வாய்ந்த ஏஜன்ட் தேவை.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்;

விநியோக மேலாளர்.

சுயாதீன பத்திரிகா சமாஜம்,

த. பெ. இல. 1257,

கொழும்பு - 12.

## கோடீஸ்வரர் மனைவி

விலா பிரான்ஸ் சேர்மர். ஆக. 23

தனது மனைவி இயூஜினின் மரணம் சம்பந்தமாக ஒரே ஒரு துக்ககரமான உண்மையே இருக்கிறது என 61 வயதான கிரேக்க கப்பல் கோடீஸ்வரரான திரு. ஸ்டாங்ரோஸ் நியார் கோஸ் கூறியிருக்கிறார்.

## பஸ் ஊழியர் வேலை நிறுத்தம் முடிந்தது

மட்டக்குளிய இ. போ. ச. பஸ் டிப்போவின் சாரதிகள், கண்டக்டர்களின் சனிக்கிழமை மேற்கொண்ட வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

இ. போ. ச. ஊழியர்களுக்கும், மட்டக்குளிய பஸ் டிப்போ சிற்றுண்டிச்சாலை ஊழியர்களுக்கும் இடையில் ஒரு கைகலப்பு ஏற்பட்டுப் பலர் காயமடைந்தனர். இதனையடுத்தே வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

மோதரைப் பொலீஸார் இவ்விஷயமாக இருவரைக் கைதுசெய்துள்ளனர். (ல-15)

## 4 நிருபர்கள் விடுதலை

ஹாங்காங். ஆக. 23

இளவரசர் சிஹானுக்கின் தற்காலிக கம்போடிய அரசாங்கம் தான் கைப்பற்றியுள்ள 4 மேற்கு நாட்டு நிருபர்களை விடுதலை செய்யத் தீர்மானித்திருக்கிறது.

## 19 வயது இந்திய அழகி ஆசிய அழகியாகத் தெரிவு

மணிலா, ஆக. 23

ஆசிய அழகு ராணியாகத் தெரிவு செய்யப்பட்ட 19 வயதான இந்திய அழகி செல்வி ஸீனட் அமான் மூன்று படங்களில் நடிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளார்.

அழகுராணித் தெரிவில் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த செல்வி அலிஸ் கிறிஸோஸ் டோமோவுக்கும் செல்வி ஸீனட்டுக்குமிடையே நெருக்கமான போட்டி இருந்தது. எனினும் 13 மத்தியஸ்தர்கள் குழு 37-25½-36½ அளவுகளைக் கொண்ட இந்திய அழகியையே ஆசிய அழகு ராணியாகத் தேர்ந்தெடுத்தது. அதற்கான வெகுமதி 666 பவுன்களையும், ஆசிய சுற்றுப்பிரயாணச் சலுகையையும் ஸீனட் பெற்றார்.

பிலிப்பைன்ஸ் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

5 அடி 7 அங்குல உயரமான இந்திய அழகி ஒரு "பாஷன் மாடலும்" ஆவார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கரோலின் டார்ட்னெல் மூன்றுவது இடத்தைப் பெற்றார்.

ஹாவாயைச் சேர்ந்த யுவோனி ஹங்ஞனி நான்காம் இடத்தையும், நியூஸிலாந்தைச் சேர்ந்த ஜெரால்டின் வெல்போர்ட் 5ம் இடத்தையும் பெற்றனர்.

பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா, ஹாவாய், நியூஸிலந்து அழகிகள் நால்வரும் தலா 133 பவுன்களைப் பரிசாகப் பெற்றனர்.

இந்திய அழகியின் தெரிவை அடுத்து 10,000 ரசிகர் கூட்டம் உற்சாகமான கரகோஷங்களை எழுப்பியது.

சென்ற ஆண்டின் ஆசிய அழகி, தென் கொரியாவைச் சேர்ந்தவர் ஆவார்.

புன்னகையை உதிர்த்துவிட்ட இந்திய அழகியின் தலை நிறைய பூக்கள் அலங்கரித்தவண்ணம் இருந்தன.

ஆசிய அழகுராணிப் போட்டியில் இலங்கை, இந்தியா, ஆஸ்திரேலியா, நியூஸிலந்து, ஹாவாய், குவாம், ஜப்பான், ஓகினைவா, தென் கொரியா, சிங்கப்பூர், மலேஷியா, இந்தோனேஷியா, லெபனன், இஸ்ரவேல், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் பங்குபற்றின.

இலங்கை அழகியான மிஸ் சில்வா சற்றுச் சுகவீனமுற்றிருந்தும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என வற்புறுத்தியது நேற்றைய நிகழ்ச்சியில் ஒரு சம்பவமாகும். (ல)

## நட்புநாடுகளுக்கு யு. எஸ். உதவி

சேன் கிளிமோட் (கலிபோர்னியா), ஆக. 23

தென் கிழக்கு ஆசியாவில் தமது நட்பு நாடுகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என ஜனாதிபதி நிக்ஸன் கூறினார்.

## 'இந்தியாவின் ஜனநாயக விரோதி வறுமையே' —இந்திரா

"இந்திய ஜனநாயகத்தின் விரோதி வறுமை, கம்யூனிஸம் அல்ல" என்று மேற்கு வங்காளப் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி.

மேற்கு வங்கத் தலைநகர் கல்கத்தாவில் நிருபர்களின் கேள்விக்குப் பதிலளித்த பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி இவ்வாறு கூறினார்.

மேற்கு வங்கத்தில் வளர்ந்து வரும் கம்யூனிஸ்ட் பலாத்காரத்தை அடக்க அரசாங்கம் அவசர நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்ற கேள்விக்கு இந்திரா பதிலளித்தார்.

"இந்திய அரசியலில் பலாத்காரம் புதிய ஒரு விஷயமல்ல. இந்தப் பலாத்காரத்தை சரியான முறையில் சமாளிக்கக்கூடாது என நான் கூறவில்லை. வறுமையை அகற்றுவதே இதற்குச் சரியான பரிகாரம்.

"எனினும் மேற்கு வங்கத்தில் புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கானசூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை" என்றும் இந்திரா தெரிவித்தார்.

மாவோ புரட்சிக்காரர்களின் கோட்டையான மேற்கு வங்காளத்துக்கு திருமதி காந்தி ஒரு நாள் விஜயத்தை மேற் கொண்டிருக்கிறார். பாகிஸ்தானிலிருந்து ஓடி வந்த பல்லாயிரக்கணக்கான அகதிகள் குடியமர்த்தப்பட்டிருக்கும் முகாம்களை பார்வையிட அவர் இங்கு வந்திருக்கிறார்.

"கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஹிந்துக்கள் இந்தியாவுக்குள் பிரவேசிப்பதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தானை இந்தியா வற்புறுத்தி இருக்கிறது" என்றும் இந்திரா கூறினார்.

இவ்வாண்டு ஜனவரி மாதத்திற்குப் பின் 1,77,740 ஹிந்துக்கள் கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் நுழைந்திருக்கிறார்கள். (ல)

### கொலை வழக்கில் சாட்சியம்

## 'பெண்ணின் தலையில் தாக்கி ரயில் பாதையில் தள்ளினர்'

காலி, ஆக. 23

"மேபல் பேட் குசினியில் நித்திரை செய்து கொண்டிருந்தாள். எதிரி அவளை எழுப்பி ரயில் பாதை வரையும் கூட்டிச் சென்று, ஓர் இரும்புக் கம்பியால் அவள் தலையில் அடித்து, ரயில் பாதையில் தள்ளிவிட்டார்."

ஊமைப் பெண் கமலா மேற்கண்டவாறு சாட்சியம் அளித்தார். ஊமைப் பாஷை மொழி பெயர்ப்பாளர் அவளின் சாட்சியத்தை விளங்கப்படுத்தினர்.

காலி நீதிபதி திரு. ஜே. சேனதிராசா முன்னிலையில் நடைபெற்ற கொலை வழக்கிலேயே மேற்படி ஊமைப் பெண் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில், சென்ற ஜூலை மாதம் 27-ந் திகதி காலிக்கு அண்மையில் ரயில் பாதையில் மேபல் பேட் (24 வயது) என்னும் பெண்ணைக் கொலை செய்ததாக பி. ஆர்தர், பி. எல். சிரிபால ஆகியோர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

கமலா மேலும் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

"இரு எதிரிகளையும் எனக்கு நன்கு தெரியும். அவர்களுடன் தான் நான் வசித்து வந்தேன். மேபல் பேட்டும் எங்களுடன் இருந்தார். சம்பவம் நடைபெறுவதற்கு இரு மாதங்களுக்கு முன் வேறாக இருந்தார்.

"ஜூலை 25-ந் திகதி மேபல் இரண்டு மணியளவில் வீட்டுக்கு வந்தாள். மாலையில் பின்கதவால் அவள் போனபோது மற்றும் மூவர் அவளுடன் சென்றனர். அன்று இரவு முதல் எதிரியின் மனைவியைப் பொலீஸார் கூட்டிச் சென்றனர். அதன் பிறகு நான் படுத்து விட்டேன். விடியற்காலை எழுந்தபோது மேபல் என் பக்கத்தில் படுத்திருந்தாள்.

"இதன் பிறகுதான் மேற்படி சம்பவம் நடைபெற்றது. மேபல் போட்ட சத்தத்தில் நாய்கள் குரைத்தன. அடுத்த நாள் நான் பார்த்தபோது மேபல் உடம்பில் பல காயங்கள் இருந்தன" என்றாள்.

இரும்புக் கம்பிகள், இரண்டு சட்டைகள் ஆகியவற்றைச் சாட்சி அடையாளம் காட்டினர்.

வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ல-15)


## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.




**S. P. S. ஜெயம் அன் கோ.**

மதுரை - கொழும்பு.

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு,

கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்: 26584.


இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 24 ஆகஸ்ட் 1970.
Thanthi Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org